THE HINDU

Region




# No outpatient services at Jipmer on polling day

Outpatient services will not be available at the Jawaharlal Institute of Postgraduate Medical Education and Research (Jipmer) on April 19 in view of the holiday declared in connection with polling for the upcoming Lok Sabha election. While asking patients not to visit the outpatient units on that day, the institute clarified that emergency services would be provided as usual.

Daily Thanthi Puducherry 14-4-2024

## நாடாளுமன்ற தேர்தல் தினத்தன்று

# ஜிப்மர் புறநோயாளிகள் பிரிவு இயங்காது

புதுச்சேரி, ஏப்.14-

புதுச்சேரி கோரிமேடு ஜிப்மர் ஆஸ்பத்திரி அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

நாடாளுமன்ற தேர்தல் வருகிற 19-ந்தேதி நடக்கிறது. இதையொட்டி அன்று விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் ஜிப்மர் புறநோயாளிகள் பிரிவு செயல்படாது. எனவே வெளிப்புற நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதை தவிர்க்க வேண்டும். அதே சமயம் அவசர பிரிவு வழக்கம்போல் செயல்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

தினமலர்

# ஜிப்மர் வெளி நோயாளி பிரிவு 19ம் தேதி இயங்காது

**புதுச்சேரி, ஏப். 14–**

புதுச்சேரி லோக்சபா தேர்தலை முன்னிட்டு வரும், 19ம் தேதி வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது என, ஜிப்மர் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இது குறித்து மருத்துவ நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

லோக்சபா தேர்தல் ஓட்டுப்பதிவை முன்னிட்டு வரும், 19ம் தேதி அரசு விடுமுறை தினமான அன்று, ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது. அதனால், அன்றைய தினம் நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டு கொள்ளப்படுகின்றனர்.

எனினும் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம் போல இயங்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

● Dinakaran ● Puducherry ● 14.4.2024

## நாடாளுமன்ற தேர்தல் அன்று

# ஜிப்மரில் வெளிப்புற சிகிச்சை பிரிவு இயங்காது

**புதுச்சேரி, ஏப். 14:** புதுச்சேரியில் வருகிற 19ம் தேதி நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுவதால், அன்றைய தினம் ஜிப்மரில் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இயங்காது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி ஜிப்மர் இயக்குனர் ராகேஷ் அகர்வால் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மக்களவை பொதுத் தேர்தல் வாக்குப்பதிவை முன்னிட்டு வருகிற 19ம் தேதி அரசு விடுமுறை தினமான அன்று ஜிப்மர் மருத்துவமனை வெளிப்புற நோயாளிகள் சிகிச்சை பிரிவு இயங்காது.

இந்த தேதியில் நோயாளிகள் வெளிப்புற சிகிச்சை பிரிவுக்கு வருவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எனினும் அவசர பிரிவு சேவைகள் அனைத்தும் வழக்கம்போல் இயங்கும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினமணி
ஞாயிற்றுக்கிழமை, 14 ஏப்ரல் 2024

# ஏப்.19-இல் புதுச்சேரி ஜிப்மர் புறநோயாளிகள் பிரிவு இயங்காது

**புதுச்சேரி, ஏப்.13:** புதுச்சேரி மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவு நடைபெறும் வரும் 19-ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஜிப்மர் மருத்துவமனையின் புறநோயாளிகள் பிரிவு இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி மக்களவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் 19-ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை முதல் மாலை 5 மணி வரையில் நடைபெறுகிறது. வாக்குப் பதிவை முன்னிட்டு பள்ளிகள் உள்ளிட்ட அரசு நிறுவனங்களுக்கு வரும் 17- ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை 3 நாள்கள் உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவு நாளான 19 ஆம் தேதி அரசு பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருப்பதால், கோரிமேடு பகுதியில் உள்ள ஜிப்மர் மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு இயங்காது என ஜிப்மர் இயக்குநர் அலுவலகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்று பொதுமக்கள் ஜிப்மர் புறநோயாளிகள் பிரிவுக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும் என்றும், அதே நேரத்தில் அவசர சிகிச்சை சேவைகள் அனைத்தும் இயங்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்து தமிழ் திசை 4 CHENNAI
திங்கள், ஏப்ரல் 15, 2024

# தேர்தல் நாளன்று ஜிப்மரில் வெளிப்புற நோயாளிகள் பிரிவு இயங்காது

● புதுச்சேரி

புதுவை ஜிப்மர் நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

மக்களவைத் தேர்தல் வாக்குப்பதிவை முன்னிட்டு ஏப்ரல் 19-ம் தேதி அரசு விடுமுறையாகும். அன்றைய தினம் ஜிப்மர் வெளிப்புற நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு இயங்காது.

அன்று வெளிப்புற சிகிச்சைக்கு நோயாளிகள் வருவதை தவிர்க்க வேண்டும். அவசர சிகிச்சைப் பிரிவு வழக்கம்போல இயங் கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.